**Source:** *Tamil Murasu*, p3
**Date:** 26 October 2016

# சமூக நிறுவனங்கள் மக்களிடையே பிரபலமடைந்து வருவதாக ஆய்வில் தகவல்

அதிகமானோர் சமூக நிறுவனங்களில் பொருட்களை வாங்குவதாக ஆய்வு ஒன்று கூறுகிறது. கடந்த 2010ஆம் ஆண்டில் 22 விழுக்காட்டினர் மட்டுமே இந்நிறுவனங்களில் பொருட்களை வாங்கிய நிலையில் அந்த விகிதம் இவ்வாண்டில் 35 விழுக்காட்டுக்கு உயர்ந்துள்ளதாக ஆய்வு சுட்டுகிறது.

பொருட்களை வாங்குவோர் நிலை இவ்வாறிருக்க சமூக நிறுவனங்கள் பற்றி அறிந்திருப்போரின் எண்ணிக்கை கிட்டத்தட்ட ஐந்து மடங்கு அதிகரித்து உள்ளதாகவும் நேற்று வெளியிடப்பட்ட ஆய்வறிக்கை தெரிவித்தது.

சமூக நிறுவனங்களுக்கான சிங்கப்பூர் மையமும் சமூக தொழில்முனைவோர் மற்றும் கொடையாளர்களுக்கான தேசிய பல்கலைக்கழகத்தின் ஆசிய மையமும் இணைந்து இந்த ஆய்வை மேற்கொண்டன.

கடந்த மே, ஜூன் மாதங்களில் மொத்தம் 1,888 பேரிடம் இருந்து கருத்துகள் திரட்டப்பட்டன.

சமூக நிறுவனங்கள் பற்றிய விழிப்புணர்வு கடந்த 2010ஆம் ஆண்டில் 13 விழுக்காடாக இருந்தது.

இவ்வாண்டு அந்த விகிதம் ஐந்து மடங்கு உயர்ந்து 65 விழுக்காட்டைத் தொட்டுள்ளது கருத்தாய்வின் மூலம் தெரிய வந்துள்ளது.

ஆய்வில் பங்கேற்றவர்களுள் 31க்கும் 35க்கும் இடைப்பட்ட வயதினரிடமே அதிகப்படியான விழிப்புணர்வு காணப்பட்டது.

அத்துடன் பத்தில் ஏழு பேர் சமூக நிறுவனங்கள் பற்றி தெரிந்து வைத்துள்ளதும் ஆய்வில் வெளிப்பட்டது.

இருப்பினும், சமூக நிறுவனங்களில் எதையும் வாங்காமலும் அவற்றைப் பற்றித் தெரிந்து கொள்ள ஆர்வம் காட்டாமலும் இருப்போரின் விகிதத்தில் எந்த மாறுதலும் காணப்படவில்லை.

கடந்த 2010ஆம் ஆண்டில் இருந்ததைப் போலவே இவ்வாண்டும் அந்த விகிதம் 23 விழுக்காடாகத் தொடர்வதாக ஆய்வு தெரிவிக்கிறது.

நேற்று தொடங்கிய சிங்கப்பூர் சமூக நிறுவனங்களின் இரண்டு நாள் மாநாட்டையொட்டி ஆய்வறிக்கை வெளியிடப்பட்டது.

இம்மாநாட்டில் பங்கேற்கும் நிறுவனத் தலைவர்களும் தொழில்முனைவர்களும் வர்த்தகத்தை சமூகம் விரும்பும் அற்புத சக்தியாக மாற்றுவது எவ்வாறு என்பதற்கான வழிவகைகளை ஆராய்ந்தனர்.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.